# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,877/6—1969 ඔක්තෝබර් 31 වැනි සිකුරාදා—1969.10.31

14,877/6 ம் இலக்கம்—1969 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### பதியப்பட்ட பங்குத் தொகுதி, பிணைகள் கட்டளைச் சட்டம்

(420 அத்தியாயமான) பதியப்பட்ட பங்குத் தொகுதி, பிணைகள் கட்டளைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பண்பால், நிதியமைச்சர் உ. பண்டா வன்னிநாயக்க ஆகிய நான்,

(1) 1962, நவெம்பர் 5 இல் ஆணையிடப்பட்டதும், 1962, நவெம்பர் 9 ஆந் தேதிய 13,387 ஆம் இலக்க அதிவிசேட "கசெற்றில்" பிரசுரிக்கப்பட்டதுமான 5–7 வருடக் கடனைப் பெறுவதன் நோக்கமாக இலங்கையில் வெளியிடப்பட்ட, பதியப்பட்ட பங்குத் தொகுதியானது, இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்படவிருக்கும் வேறு பதியப்பட்ட பங்குத் தொகுதிக்கு மாற்றக் கூடியதாக விருத்தல் வேண்டும் எனவும்,

(2) பந்தி (1) இல் குறிப்பிடப்பட்டுள்ளதான, பதியப்பட்ட பங்குத் தொகுதியினை மாற்றல் செய்வதற்கு, இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் ரூபா 1,09,08,600 கொண்ட தொகைக்கான பதியப்பட்ட பங்குத் தொகுதியினை (இனிமேல் "புதிய பங்குத் தொகுதி" எனக் கூறப்படும்.) இதற்கான அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்களின் நிபந்தனைகட்கேற்ப, ஆக்குதற்கும் வெளியிடுதற்கும் அதிகாரமளிக்கிறேன் எனவும், இத்தாற் பணிக்கின்றேன்.

உ. ப. வண்ணிநாயக்க,
நிதியமைச்சர்.

கொழும்பு, 1969, ஒற்றோபர் 31 ஆந் திகதி

#### அட்டவணை

1. புதிய பங்குத் தொகுதி வெளியீட்டின் மூலம் பெறப்பட வேண்டிய கடனானது, ஒரு கோடியே ஒன்பது இலட்சத்து எண்ணாயிரத்து அறுநூறு ரூபாய்களாகவும், சமநிலையில் வழங்கப்படும் 5–7 வருடக்கடன் மூலமாகவும் பெறப்படுதல் வேண்டும்.

2. குறிப்பிடப்பட்ட கடனானது பதியப்பட்ட பங்குத்தொகுதியை ஆக்கி, வழங்குதலினால் மாத்திரம் பெறப்படல் வேண்டும்.

3. கடன்மீது வழங்கப்படும் வட்டியின் வீதம் ஆண்டொன்றுக்கு 5 சதவீதமாகவே இருத்தல் வேண்டும்.

4. ஒவ்வோர் ஆண்டிலும் மே மாதத்தின் பதினைந்தாம் நாளும், நவெம்பர் மாதத்தின் பதினைந்தாம் நாளும் கடன் மீதான அரையாண்டு வட்டி வழங்கப்பட வேண்டிய தேதிகளாக இருத்தல் வேண்டும்.

5. கடனை மீட்கும் நோக்கத்தோடு நிறுவப்படவிருக்கும் ஆழ்நிதிக்கு உதவு தொகையாக, இலங்கையின் திரட்டு நிதியில் இருந்து ஆண்டொன்றுக்கு 5 சதவீதப்படி ஓர் அரையாண்டு ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய உதவுதொகை 1970 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் பதினைந்தாம் நாளில் தொடக்கப்படுதல் வேண்டும்.

6. புதிய பங்குத் தொகுதியினை மீட்டற்கான தேதி, 1976 ஆம் ஆண்டு, நவெம்பர் மாதம் பதினைந்தாம் நாளாகும்.

ஆயின், 1974 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் பதினான்காம் தேதிக்குப் பின்னராகவும், நிச்சயிக்கும் தேதிக்கு ஆறு மாதங்கள் முன்னர் "கசெற்றில்" வெளியிடப்படும் அறிவித்தலின் மூலம் நிதியமைச்சரால் நியமிக்கப்படக்கூடிய ஒரு தேதியாகவுள்ள அத்தகைய ஒரு பிந்திய தேதியில் இப்புதிய பங்குத் தொகுதியினை சமநிலையில் மீட்பதற்கு அரசாங்கத்திற்கு விருப்புரிமையிருத்தல் வேண்டும்.

#### தகவற்றொகுப்பறிக்கை

மாற்றுக்கான பட்டியல், 1969 நவெம்பர் 11 ஆந் தேதியில் திறக்கப்பட்டு, 1969 நவெம்பர் 15 ஆந் தேதியில் மாற்றல் செய்வதன் பொருட்டு 1969 நவெம்பர் 14 ஆந் தேதியில் மூடப்படும். மாற்றுக்கடனில் எதும் மாற்றல் செய்யப்படாத பகுதியிருப்பின் அதன் பண உதவு தொகைகளுக்குரிய பட்டியல், 1969 நவெம்பர் 15 ஆந் தேதியில் திறக்கப்பட்டு, அதே தேதியில் மூடப்படும்.

#### இலங்கை அரசாங்க மாற்றுக்கடன் ரூ. 1,09,08,600 கொண்ட 1974-76, 5 சதவீதக் கடன்

இலங்கை மத்திய வங்கி, இலங்கை அரசாங்கத்தின் சார்பாக, 1969 நவெம்பர் 15 ஆந் தேதியில் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டிய 1967–69 இலங்கை அரசாங்க $3\frac{1}{2}$ சதவீத "ஆ" தொடர்ப் பங்குத்தொகுதியின் மாற்றலால் அல்லது மாற்றப்படாத பகுதியை (எதும் இருப்பின்) பணத்தால், செய்யப்பட வேண்டிய கீழ்வரும் கடனுக்காக விண்ணப்பங்கள் கோருகின்றது.

ரூ. 1,09,08,600 முகப்பு மதிப்புடன் கூடிய 5 சதவீதக் கடன். 1976 நவெம்பர் 15 ஆந் தேதி முகப்பு மதிப்பில் திருப்பிக் கொடுபடற்குரியது. ஆயினும் அரசாங்கமானது இக்கடனை முகப்பு மதிப்பின்படி 1974 நவெம்பர் 14 ஆந் தேதிக்குப் பின் ஆறுமாத முன்னறிவித்தலின்பேரில், எந்தவொரு நாளிலும் திருப்பிக்கொடுக்க விருப்புரிமை கொண்டதாயிருக்கும்.

**அதிகாரமும் நோக்கமும்.**—இக்கடனானது, பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதிகள் பிணைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 420) ஏற்பாடுகளின் கீழும் 1962 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் அதிகாரத்தின்படியும் 1962 நவெம்பரில் திரட்டப்பட்ட 1967–69 3½ சதவீத 'ஆ' தொடர்க் ரூ. 1,66,12,100 கொண்ட கடனின் பகுதி மாற்றலுக்காக, பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி பிணைகள் கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம் 420) 34 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ்த் திரட்டப்பட்டது.

**வெளியீட்டு வடிவம்.**—பதிவுசெய்யப்பட்ட பங்குத் தொகுதிகளாக இக்கடன் வழங்கப்படும். (பதிவுசெய்த பங்குத் தொகுதிக்கேற்புடையன வான பொது நிபந்தனைகளைக் கொண்டுள்ள துண்டுத் தாள்களை, இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்திற்கு விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.)

**மாற்றுக்கான வழங்கல்.**—1967–69 3½ சதவீத "ஆ" தொடர்க் கடனை வைத்திருப்பவர்கள், தங்கள் உடைமைகளை முழுமையாகவோ அன்றி ஒரு பகுதி யாகவோ, 1974–76 புதிய சமனுன பெயரளவுத் தொகையாகிய 5 சதவீத வட்டிக் கடனுக்கு, 1969 நவெம்பர் 15 ஆந் தேதியன்று மாற்றுதல் செய்தற்காக வழங்கலாம். வழங்கல் 1969 நவெம்பர் 14 ஆந் தேதி வரை மட்டுமே மூடப்படாதிருக்கும். விண்ணப்பம் குறிக்கப்பட்ட பத்திரத்தில் தொடர்பான பங்குத் தொகுதிச் சான்றிதழ்களுடன் உடனடியாகச் செய்யப்படல் வேண்டும். புதுப் பங்குத் தொகுதிகளுக்கு முழு அரையாண்டு வட்டி 1970 மே 15 ஆந் தேதி கொடுக்கப்படும்.

**பண விண்ணப்பங்கள்.**—ரூ. 1,09,08,600 கொண்ட 1967–69 3½ சதவீத "ஆ" தொடர்க் கடனிலிருந்து செய்யப்படும் மாற்றுக்கடனின் மாற்றுச் செய்யப்படாது எஞ்சியிருக்கும் பங்குக்கான (இருப்பின் பண விண்ணப்பங்கள், 1969 நவெம்பர் 15 ஆந் தேதியன்று ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பங்கள் அதற்கான படிவத்தில் எழுதப்பட்டு முழு அனுப்பு தொகையுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும். இலங்கை சேமிப்பு வங்கியினதும், அஞ்சலகச் சேமிப்பு வங்கியினதும் வைப்பாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை இச்சேமிப்பு வங்கிகளுடன் ஒழுங்கு செய்து அவ்வங்கிகளினூடாக அனுப்பி வைக்கலாம். இலங்கை மத்திய வங்கியின் பெயரில் எழுதப்பெற்றதும், " இலங்கை அரசாங்கக் கடன் கணக்கில் " என்று குறுக்கே கோடிடப் பெற்றதுமான காசோலை மூலமாகவே கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும். முதலாவது வட்டிக் கொடுப்பனவு, விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள் தொடக்கம், 1970 மே 14 ஆம் நாளையும் உள்ளடக்கிய காலம் வரைக்காகும். வெளியீட்டுவிலை ரூ. 100 சதவீதம் விண்ணப்ப காலத்தின்போது முழுமையாகக் கொடுக்கப்படல் வேண்டும். ஆகக் குறைந்த இருப்பு ரூபா 100 ஆகும்.

**தரகு.**—வங்கியாளர்களுக்கும் (இலங்கை சேமிப்பு வங்கியும், அஞ்சலகச் சேமிப்பு வங்கியும் உட்படும்) அங்கீகாரம் பெற்ற பங்குத் தொகுதித் தரகர்களுக்கும், தரகர்களுக்கும், அவர்கள் முத்திரை தாங்கிய விண்ணப்பங்கள் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உதவுதொகையினது பெயரளவுத் தொகை மீது 1/16 சதவீத தரகு வழங்கப்படும். ஏற்றுக்கொள்ளப்பட்ட உதவு தொகையின் மீது இதே சதவீதத்தைக் கொண்ட ஒரு பேரப்பேச்சுக் கூலி வழக்கறிஞர்க்கு அவர்களின் முத்திரை தாங்கப்பெற்ற விண்ணப்பங்கள் தொடர்பாக வழங்கப்படும்.

**பங்குத் தொகுதிச் சான்றிதழ்.**—விண்ணப்பங்கள் பெறப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டபின் பங்குத் தொகுதிச் சான்றிதழ் வழங்கப்படும்.

**வட்டி.**—ஒவ்வோர் ஆண்டிலும் அரையாண்டிற்கொருமுறையாக 5 சதவீதத்தில் மே மாதம் பதினைந்தாம் நாளிலும் நவெம்பர் மாதம் பதினைந்தாம் நாளிலும் வட்டி கொடுபடும்.

**வரிவிதிப்பு.—(i) முத்திரைத் தீர்வை**— கடன் வழங்கல், மாற்றல் அல்லது மீட்பு ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்படும் ஆவணங்கள் அனைத்திற்கும், முத்திரைத் தீர்வையினின்று விலக்களிக்கப்படும்.

**(ii) வருமானவரி.**—பாகப்பிரிவினையுறுத இந்துக் குடும்பங்களின் உறுப்பினர்கள் தவிர்ந்த, ஏனைய இலங்கையில் வசிக்கும் பங்குத் தொகுதியுடையார்க்கான வட்டி, வருமான வரிக்கழிப்பெதுவுமின்றி வழங்கப்படும். எனினும் வருமானவரி செலுத்தக் கடப்பாடுடையவரான இலங்கையில் வசிக்கும் பங்குத் தொகுதியுடையார்கள், அத்தகைய வட்டியைத் தமது வருமானவரித் திரட்டிற் குறிப்பிடல் வேண்டும். இலங்கையில் வசிக்காதவர்களும், பாகப்பிரிவினையுறுத இந்துக் குடும்பங்களின் உறுப்பினர்களுமானவர்களின் வட்டியிலிருந்து கொடுபட வேண்டிய வரி, வருவாய்க் களனிலேயே கழிக்கப்படுதல் வேண்டும். (நடைமுறையிலுள்ள வருமானவரி விகிதம்.—இலங்கையில் வசியாத தனியாட்களின் விடயத்தில் 33⅓ சதவீதமும், பாகப் பிரிவினையுறுத இந்துக் குடும்பங்களின் விடயத்தில் 39⅜ சதவீதமும், இலங்கையில் வதியாத கூட்டுநிலையங்களுக்குச் செலுத்தப்படும் அல்லது அவற்றில் வரவில் வைக்கப்படும் வட்டியின் விடயத்தில் 67 சதவீதமும் ஆகும்). இலங்கை வருமான வரியிலிருந்து விலக்கபெற்ற ஆட்கள், அவர்களிடமிருந்து கழிக்கப்பெற்ற வரியைத் திரும்பத் தரும்படி கோர உரிமையுடையவர்களாவர்.

**(iii) சொத்து வரி.**—அரசாங்கமானது, இலங்கையிலே வழங்கப்படும் இலங்கை அரசாங்கப் பங்குத் தொகுதிகளைச் சொத்துவரிக் கொடுப்பனவின் பேரில் ஏற்றுக்கொள்கிறது. முகப்பு மதிப்பில் வழங்கப்பட்டதும், அம்மதிப்பில் திருப்பிக் கொடுபடக்கூடியதுமான கொடுப்பனவு பற்றிய பங்குத் தொகுதியைப் பொறுத்தமட்டில், அதன் மொத்தப் பெறுமானமும், அதன் வட்டியும் சேர்ந்த தொகைக்குச் சமமான சொத்து வரித் தொகையொன்றினை அது சமன் செய்யும். கொடுப்பனவு முற்றுக அல்லது முகப்பு மதிப்பிற்குக் குறைவாக வழங்கப்பட்ட அல்லது முகப்பு மதிப்பு விலை அல்லாத வேறொரு விலையில் திருப்பிக் கொடுபடவேண்டிய பங்குத்தொகுதியைப் பொறுத்தமட்டில், பெயரளவான நூறு ரூபாய்ப்பங்குத் தொகுதிக்கும் அதனிற் சேர்ந்த வட்டிக்குமாகச் சமன் செய்து கொள்ளக்கூடிய சொத்துவரித் தொகை பற்றி அரசாங்கக் " கசெற்றில் " காலத்துக்குக்காலம் அறிவிக்கப்படும். ஆயின், பெயரளவில் ரூபா 100 பங்குத் தொகுதிக்காகச் சமன் செய்து கொள்ளக்கூடிய தொகை முதலில் உதவுதொகையாகப் பெற்ற தொகைக்கோ, முதிர்ச்சியின்போது திருப்பிக் கொடுபட வேண்டிய தொகைக்கோ, எது குறைவாக உள்ளதோ அதற்குக் குறையாமல் இருக்கும். சொத்துவரிக் கொடுப்பனவுக்கான பணத்திற்குப் பதிலாக எப்பங்குத் தொகுதியினையும் ஏற்றுக்கொள்வது, பின்வரும் இரண்டினில் ஒன்றை நிபந்தனையாகக் கொண்டுள்ளது.

(அ) முதலில் வழங்கப்பட்டபோது இறந்தவரால் உதவு தொகையாகக் கொடுக்கப்பட்டிருத்தல் வேண்டும், அல்லது

(ஆ) இறந்தவரால், அவர் இறந்த தேதிக்கு ஓராண்டிற்கு முன்னரே கொள்வனவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிணை.**—இக்கடனுக்கு இலங்கைத் திரட்டு நிதி பிணையாக அமைந்துள்ளது. இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினது முகாமையின் கீழ், கடனை மீட்கும் நோக்கத்திற்கெனத் தனியே ஒரு கடனுழ் நிதி நிறுவப்படும். இச்சபையே கடனுழ் நிதிகளின் நம்பிக்கைப் பொறுப்பாளராதல் வேண்டும். கடனுழ் நிதிக்கு இறுக்கப்படும் 5 சதவீத அரையாண்டு உதவு தொகைகள், 1970 நவெம்பர் 15 ஆந் தேதி தொடக்கப்படும்.

**பொதுப்படுகடன்.**—நிதியாக்கப்பட்டுள்ள இலங்கையின் இப்போதைய மொத்தப் பொதுப்படுகடன் ரூபா 462,43,41,408 ஆகும். ஒன்று சேர்ந்த கடனுழ் நிதிகளின் அண்ணளவான சந்தைப் பெறுமானம் ரூபா 64,88,84,430 ஆகும். ஆகவே, நிதியாக்கப்பட்ட தேறிய பொதுப்படுகடன் ரூபா 397,54,56,978 ஆகும்.

**விண்ணப்பப் படிவங்கள்.**—விண்ணப்பப் படிவங்களைப் பொதுப்படுகடன் திணைக்களத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுப்படுகடன் பதில் பதிவாளர்.

பொதுப்படுகடன் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
அ. பெ. 1149,
கொழும்பு, 1969 ஒற்ரோபர் 31,

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.